**சிறப்பு நீதிமன்றம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சட்ட வழக்குகள் விசாரணை, திண்டுக்கல் (முதன்மை அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்)**

**முன்னிலை : திரு.V. பத்மநாபன், M.A., M.L., D.H.,**
சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
சட்ட வழக்குகள் விசாரணை, திண்டுக்கல்
(முதன்மை அமர்வு நீதிபதி மன்றம், திண்டுக்கல்)

2026–ம் வருடம் ஜீலை மாதம் 8–ம் நாள் புதன் கிழமை

**சிறப்பு ஆண்டுபட்டிகை வழக்கு எண்.35/2014**

(மதுரை நீதிமன்ற சிறப்பு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 144/2011)

| | | |
|---|---|---|
| அரசுக்காக | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்பு பிரிவு<br>திண்டுக்கல் குற்ற எண்.04/2005 |
| எதிரியின் பெயர் | : | சொக்கலிங்கம், த/பெ. வேலாயுதம்,<br>முன்னாள் வனச்சரகர்,<br>மலை பாதுகாப்பு சரகம்,<br>கொடைக்கானல் பிரிவு, கொடைக்கானல்,<br>தற்போது<br>மேகமலை மலைபாதுகாப்பு சரகம்,<br>சின்னமனூர், தேனி மாவட்டம். |
| எதிரி மீதான குற்றம் | : | புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகாவில் உள்ள திருக்களம்பூர் கிராமத்தில் சிறு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எதிரி சொக்கலிங்கம் என்பவர் கடந்த 10.08.1973 அன்று வனவராக பணியமர்த்தப்பட்டு, 1991 முதல் 1995 வரை சேலம் பிரிவு மற்றும் கொடைக்கானல் பிரிவில் வனவராக பணிபுரிந்த பின்னர், வனச்சரகராக பதவி உயர்வு பெற்று 10.08.1995 முதல் 24.12.2001 வரை கொடைக்கானல் பிரிவில் வனச்சரகராகவும், தற்போது 10.09.2007 முதல் மேகமலை மலைப் பாதுகாப்புப் பகுதியில் வனச்சரகராகவும் பணியாற்றி பிரிவு 2(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன் கீழ் பொது ஊழியராக இருந்தபோது, வளையபுரிப்பட்டியைச் சேர்ந்த மரகதம் என்பவரை திருமணம் செய்து கொண்டு, அவர் இல்லத்தரசியாகவும், அவருக்கென்று வேலையோ, |

தனிப்பட்ட வருமானமோ இல்லாமல் எதிரியைச் சார்ந்துள்ள நிலையிலும் , அவர்களுக்கு பிறந்த ஒரே மகன் தினேஷ்குமார் என்பவர் 2002ம் ஆண்டு சேலம் வைசிஸ் கல்லூரியில் பட்டம் பயின்று வந்துள்ள நிலையிலும். திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிக்கு கிடைத்த நம்பகத் தகவலின் அடிப்படையில், எதிரி, மீது குற்ற எண்.04/2005, சட்டப் பிரிவுகள் 13(2) r/w. 13(1)(e) ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில், எதிரி அவரது மனைவி மற்றும் மகன் ஆகிய இருவரின் பெயரிலும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றும், அவர் செய்த பண பரிவர்த்தனைகளைக் கருத்தில் கொண்டு, காசோலை காலமாக 01.01.1992 காலை 31.12.2001 வரை நிர்ணயிக்கப்பட்டு இணைப்பு-1 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ.37,634/- மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருப்பதாகவும், 31.12.2001 அன்று, இணைப்பு-II இல் விவரிக்கப்பட்டுள்ளபடி அவரது மனைவி மற்றும் அவரது மகன் பெயரில் ரூ.55,85,134.01/- மொத்த மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருந்ததாகவும், இணைப்பு-III இல் விவரிக்கப்பட்டுள்ளபடி எதிரியின் சட்டப் பூர்வமான சம்பளம் மற்றும் படிகள் விவசாய வருமானம், வங்கி வைப்பீட்டின் வட்டி, பொது வைப்பு நிதியிலிருந்து பெற்ற கடன் மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து பெற்ற கடன் ஆகியவற்றின் மூலம் ரூ.10,03,042.01/- என மதிப்பிடப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, சோதனைக் காலத்தில் எதிரி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் செய்யப்பட்ட செலவு, இணைப்பு-IV இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ.62,20,417.00/- என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், சோதனை காலத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் செய்த மொத்த செலவு, அவரது வருமான ஆதாரங்களிலிருந்து பெற்ற மொத்த வருமானத்தை விட ரூ.52,17,374.99/-

| | |
|---|---|
| | அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதால், திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரியின் விசாரணையில், சோதனை காலமான 01.01.1992 முதல் 31.12.2001 வரையிலான காலகட்டத்தில், எதிரிக்கு கிடைக்கக் கூடிய சட்டப்படியான வருமானத்திற்கு அதிகமாக அவரது மனைவி மற்றும் அவரது மகனின் பெயரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சொத்துக்களை வைத்திருந்ததாக கண்டறியப்பட்டும், எதிரி பெற்ற சட்டப்படியான வருமானத்திற்கு அதிகமாக ரூ.1,07,64,875/- அளவிற்கு, அதாவது 1073.22% வீதத்தில் அளவுக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு எதிரி கணக்குக் காட்டாததால், எதிரி மீது ஊழல் தடுப்புச் சட்டம், 1988 பிரிவுகள் 13(2) r/w. 13(1)(e) இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் : | எதிரி மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சட்டம் 1988 பிரிவுகள் 13(2) r/w. 13(1)(e)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் வாதுரை : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | எதிரி இறந்துவிட்டபடியால், எதிரியின் மீதான குற்றம் அற்றுபோய் விட்டது. |

இந்த வழக்கு திண்டுக்கல், தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் 18.10.2010 ம் தேதியன்று Spl.CC No. 7/2010 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு மதுரை, சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, மதுரை ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் Spl. CC. 144/2011 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்பு G.O.Ms.No. 666 Home Courts II Dept. dated 10.9.2014-ன்படி மீண்டும் 11.11.2014 அன்று திண்டுக்கல், தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கு

மாறுதலாகி வரப்பெற்று, Spl.CC.35/2014 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC.No.26691/C/2022/G3, ROC,No.97136/A/2019/G3 and ROC.No.36877/ 2024/G3, நாள் 29.05.2025–ல் ஏற்பட்ட உத்தரவின்படி இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, அதே எண்ணில் Spl.CC.35/2014 ஆக 15.10.2025–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் திருமதி. I. ஜான்சி ராணி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு M. கண்ணப்பன் அவர்களும் முன்னிலையாகி, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகாவில் உள்ள திருக்களம்பூர் கிராமத்தில் சிறு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எதிரி சொக்கலிங்கம் என்பவர் கடந்த 10.08.1973 அன்று வனவராக பணியமர்த்தப்பட்டு, 1991 முதல் 1995 வரை சேலம் பிரிவு மற்றும் கொடைக்கானல் பிரிவில் வனவராக பணிபுரிந்த பின்னர், வனச்சரகராக பதவி உயர்வு பெற்று 10.08.1995 முதல் 24.12.2001 வரை கொடைக்கானல் பிரிவில் வனச்சரகராகவும், தற்போது 10.09.2007 முதல் மேகமலை மலைப் பாதுகாப்புப் பகுதியில் வனச்சரகராகவும் பணியாற்றி பிரிவு 2(c) ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன் கீழ் பொது ஊழியராக இருந்தபோது, வளையபுரிப்பட்டியைச் சேர்ந்த மரகதம் என்பவரை திருமணம் செய்து கொண்டு,

அவர் இல்லத்தரசியாகவும், அவருக்கென்று வேலையோ, தனிப்பட்ட வருமானமோ இல்லாமல் எதிரியைச் சார்ந்துள்ள நிலையிலும் , அவர்களுக்கு பிறந்த ஒரே மகன் தினேஷ்குமார் என்பவர் 2002ம் ஆண்டு சேலம் வைசிஸ் கல்லூரியில் பட்டம் பயின்று வந்துள்ள நிலையிலும். திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிக்கு கிடைத்த நம்பகத் தகவலின் அடிப்படையில், எதிரி மீது குற்ற எண்.04/2005, சட்டப் பிரிவுகள் 13(2) r/w. 13(1)(e) ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில், எதிரி அவரது மனைவி மற்றும் மகன் ஆகிய இருவரின் பெயரிலும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றும், அவர் செய்த பண பரிவர்த்தனைகளைக் கருத்தில் கொண்டு, சோதனை காலமாக 01.01.1992 காலை 31.12.2001 வரை நிர்ணயிக்கப்பட்டு இணைப்பு–1 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ.37,634/– மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருப்பதாகவும், 31.12.2001 அன்று, இணைப்பு–II இல் விவரிக்கப்பட்டுள்ளபடி அவரது மனைவி மற்றும் அவரது மகன் பெயரில் ரூ.55,85,134.01/– மொத்த மதிப்புள்ள சொத்துக்களை வைத்திருந்ததாகவும், இணைப்பு–III இல் விவரிக்கப்பட்டுள்ளபடி எதிரியின் சட்டப் பூர்வமான சம்பளம் மற்றும் படிகள் விவசாய வருமானம், வங்கி வைப்பீட்டின் வட்டி, பொது வைப்பு நிதியிலிருந்து பெற்ற கடன் மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து பெற்ற கடன் ஆகியவற்றின் மூலம் ரூ.10,03,042.01/– என மதிப்பிடப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும் போது, சோதனைக் காலத்தில் எதிரி மற்றும் அவரது குடும்ப

உறுப்பினர்களால் செய்யப்பட்ட செலவு, இணைப்பு–IV இல் விவரிக்கப்பட்டுள்ளபடி ரூ.62,20,417.00/– என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், சோதனை காலத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் செய்த மொத்த செலவு, அவரது வருமான ஆதாரங்களிலிருந்து பெற்ற மொத்த வருமானத்தை விட ரூ.52,17,374.99/– அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதால், திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரியின் விசாரணையில், சோதனை காலமான 01.01.1992 முதல் 31.12.2001 வரையிலான காலகட்டத்தில், எதிரிக்கு கிடைக்கக் கூடிய சட்டப்படியான வருமானத்திற்கு அதிகமாக அவரது மனைவி மற்றும் அவரது மகனின் பெயரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் சொத்துக்களை வைத்திருந்தது கண்டறியப்பட்டும், எதிரி பெற்ற சட்டப்படியான வருமானத்திற்கு அதிகமாக ரூ.1,07,64,875/– அளவிற்கு, அதாவது 1073.22% வீதத்தில் அளவுக்கு, அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு எதிரி கணக்குக் காட்டாததால், எதிரி மீது ஊழல் தடுப்புச் சட்டம், 1988 பிரிவுகள் 13(2) r/w. 13(1)(e) இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன் 08.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் எதிரி இறந்ததாக எதிரியின் இறப்பு சான்றிதழுடன் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பாணை

பரிசீலிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது. எனவே, எதிரியின் மீதான குற்றம் அற்றுப்போய்விட்டது என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் 2026-ம் ஆண்டு ஜீலைத் திங்கள் 8ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/-திரு.V. பத்மநாபன்**
**சிறப்பு நீதிபதி,**
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
சட்ட வழக்குகள் விசாரணை,
திண்டுக்கல்
(முதன்மை அமர்வு நீதிபதி
திண்டுக்கல்)

குறிப்பு :

1. இவ்வழக்கில் வழக்கு சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்படுகிறது.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.